குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி
(தன்னாட்சி)
தஞ்சாவூர் - 7.

முதுகலைத் தமிழிலக்கியம் - முதலாமாண்டு

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - 18KPIT04

**அலகு - I.**

சிறப்புப்பாயிரக் கருத்துக்கள்!-

சிறப்புப் பாயிரம் என்பது ஒரு நூல் பற்றிய பொதுத் தன்மை அனைத்தையும் உள்ளடக்கியதாகும். சிறப்புப் பாயிரம் உணர்த்தும் கருத்துக்களைப் பவணந்தி முனிவர் நன்னூலில் (நூற்பா. 47. 48).

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனொடு ஆயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே".

காலம் களனே காரணம் என்று இம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே".

என்று குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பிய சிறப்புப் பாயிரமானது,

வட வேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல் உலகத்து
- - - - - - - - - -

மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே".

என்று உரைக்கின்றார்.

வடவேங்கடம், தென்குமரி என்னும் இரண்டு எல்லைகளையும் கொண்டது பழந்தமிழகம் ஆகும்.

பேச்சு வழக்கு செய்யுள் வழக்கு என்னும் இரு வழக்கு மொழிகளைக் கொண்டது தமிழ். இம்மொழிக்கு எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என்பவை முந்து நூல்கள் வழி முறைப்பட ஆராயப் பட்டுள்ளன.

மாற்றாரது நிலத்தினையும் தன்கீழ்க் கொண்டு வரும் பேராற்றல் மிக்க பாண்டியன் மாகீர்த்தியின் அவையில் அரங்கேற்றப் பட்டது.

அறமே கூறும் நாவினை உடைய நான்கு வேதத்தையும் நிறைந்துணர்ந்த அதங்கோட்டு ஆசானுக்கு இந்நூல் அற ஆராய்ந்து கூறப்பட்டதாகும்.

கடல் சூழ்ந்த இவ்வுலகின் கண்ணே ஐந்திரம் என்னும் இலக்கண நூலில் தேர்ந்த தொல் குடியில் தோன்றியவன் என்பது கெடாமல் தொல்காப்பியன் எனப் பெயரைக் கொண்ட புகழ் உடையோன்.

| | |
|---|---|
| ஆக்கியோன் பெயர் | : தொல்காப்பியன் |
| வழி | : முந்து நூல் (அகத்தியம்...) |
| எல்லை | : வடவேங்கடம், தென்குமரி. |
| நூல் பெயர் | : தொல்காப்பியம். |
| யாப்பு | : தொகை, வகை, விரி |
| நுதலிய பொருள் | : எழுத்து, சொல், பொருள் |
| கேட்டோர் | : அதங்கோட்டு ஆசான் முதலோர் |
| பயன் | : மொழித் திறப்படல் |
| காலம் | : பாண்டியன் மாகீர்த்தி. |
| களம் | : பாண்டியன் அவைக்களம் |
| காரணம் | : அரசன் தேவரோரைப் வேண்டல். |

## எழுத்துக்களின் எண்ணிக்கை உரைத்தல்!

தமிழ் மொழிக்கு உரிய எழுத்துக்களின் எண்ணிக்கை மற்றும் அதன் தொகையினை வரையறுத்து கூறுவதே எண்ணும் இயல் ஆகும். இதில் முதல், சார்பு எழுத்துக்கள் பற்றியும் அவை பெறும் அளபு, வரி வடிவு, மயக்கம் போன்றவை பற்றியும் சிறப்பாகக் கூறப்படுகின்றது.

### முதல் எழுத்துக்கள்!

எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப
சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே!

மொழிக்கு அடிப்படையாக அமைந்த முதல் எழுத்துக்கள் என்று சிறப்பித்துக் கூறத்தக்கவை அகரம் தொடங்கி னகர மெய் முடிய உள்ள முப்பது ஆகும். அவற்றைச் சார்ந்து வரக் கூடிய சார்பெழுத்துகள் மூன்றோடு முப்பத்து மூன்று முதல் எழுத்துகள் ஆகும்.

12 - உயிர்: அ.ஆ.இ.ஈ.உ,ஊ.எ.ஏ.ஐ.ஒ.ஓ.ஔ
18 - மெய்: க்.ங்.ச்.ஞ்.ட்.ண்.த்.ந்.ப்.ம்.ய்.ர்.ல்.வ்.ழ்.ள்.ற்.ன்.
3 - குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்.
33

சொற்களில் வேறுபட்டு வருபவையே முதல் எழுத்து ஆகும். அவை மொழி முதலும் (சொல்) இடையிலும், இறுதியிலும் வந்து பொருள் வேறுபாட்டை வெளிப்படுத்தும்.

### சார்பெழுத்துகள்!

அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன"

முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்துகள்.

சார்பெழுத்து — குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்.
இம் மூன்றும் அவை சார்ந்து வரும் எழுத்தைக் கொண்டே அறிந்து கொள்ள முடியும். ஆய்தத்திற்கு வடிவம் உண்டு. ஏனையவற்றிற்கு வடிவம் இல்லை. இவை தனித்து இயங்காது என்பன எழுத்துக்களைச் சார்ந்தே இயங்கும்.

சான்று சிந்தனைக்கோர் குறுவிடைத்தப் பாப்பாக்கோள் அதாவது

குற்றுயிர்கள்!

அவற்றுள்
அ இ உ
எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப".

இவ் எழுத்துகள் பன்னிரண்டனுள் அ. இ. உ. எ. ஒ என்னும் ஐந்தும் குறில் (குற்றுயிர்) எனப்படும். இவை ஒரு அளபு ஒலிக்கும் தன்மையைப் பெறும்.

நெட்டுயிர்கள்!

ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப".

இவ் எழுத்துகள் பன்னிரண்டனுள் ஆ. ஈ. ஊ. ஏ. ஐ. ஓ. ஔ என்னும் ஏழும் நெடில் (நெட்டுயிர்) எனப்படும். இவை இரண்டு அளபு ஒலிக்கக் கூடியவை ஆகும். மூன்று அளபு ஒலிக்கும் தனி எழுத்து இல்லை.

அளவு நீண்டு ஒலிக்கும் எழுத்துக்கள் தனக்கு இனமான எழுத்துக்களை அளபு எடுத்து ஒலிக்கும். இதுவே அளபெடை எனப்படும்.

சான்று: ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ
ஐஇ, ஔஉ என வரும்.

## எழுத்துக்களின் அளவு:-

எழுத்துக்கள் பெறும் ஒலிப்பு முறைக்கு அளவு என்று பெயர். இது மாத்திரை எனக் குறிக்கப்பெறும்.

'கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே"
(நூ: 7)

கண்ணிமைத்தலும், நொடித்தலும் மாத்திரையின் அளவிற்குக் குறியீடு ஆகும். இமைத்தல் குறிப்பால் உணரப்படுவது. நொடித்தல் ஓசையால் அறியப்படுவது.

மாத்திரை அளவு கால், அரை, ஒன்று, இரண்டு எனப் பல அளவுகள் உள்ளன.

'மெய்யின் அளபே அரையென மொழிப"

மெய்யெழுத்துகள் ஒவ்வொன்றும் அரை(1/2) மாத்திரை அளவைப் பெறும் எனக் குறிப்பர்.

மாத்திரை அளவு என்பது ஒவ்வொரு வகை எழுத்தும் ஒலிக்கும் இயல்பான அளவைக் குறிக்கும். இது எழுப்பும் எழுத்திற்கும் பொருந்தும்.

## சார்பெழுத்துக்களின் மாத்திரை அளவு:-

" அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே" (நூ: 12)

மெய்யெழுத்துக்களைப் போன்றே அரை அளவு மாத்திரையே குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் சார்பு எழுத்துகளும் பெறும்.

"அரையளபு குறுகல் மகரம் உடைத்தே"

அரை அளபு மாத்திரையினின்று குறுகி ஒலிக்கும் தன்மை உடையது மகரம். கால் மாத்திரை அளவில் ஒலிக்கும் தன்மையால் இஃது மகரக் குறுக்கம் எனப்படும்.

சான்று: போன்ம், வரும்.

## வரிவடிவம்:.

மகரத்தின் வடிவமானது புறத்தே பெறும் புள்ளியோடு உள்ளேயும் ஒரு புள்ளியை மகரம் பெறும்.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" (நூ: 15)

எனவே மெய்யெழுத்தின் இயல்பு புள்ளியைப் பெற்று இருப்பதாகும்.

நூற்பா எண் 16. இல் எ, ஒ எனும் இரண்டும் எழுத்து புள்ளி பெறும், ஏ. ஓ. என்னும் நெடில் எழுத்து புள்ளி பெறாது எனக் கூறப்படுகிறது.

"புள்ளி இல்லா எல்லா மெய்யும் - எனத் தொடங்கும் 17-ஆவது நூற்பாவில் உயிர் மெய் எழுத்துக்கள் புள்ளி பெறாதவை ஆகும் பிற உயிரொடு சேரும் போது வரிவடிவில் பல்வேறு மாற்றங்களைப் பெறும் எனக் கூறப்படுகிறது.

## இன எழுத்துகள்:.

பதினெட்டு மெய்யெழுத்துகளும் மூவகை இனமாக பகுக்கப்பெறும். வல்லினம், மெல்லினம், இடையினம். (நூற்: 19, 20. 30)

க். ச். ட், த், ப். ற் — வல்லினம்

ங். ஞ். ண், ந். ம், ன் — மெல்லினம்.

ய், ர், ல். வ், ழ், ள் — இடையினம்.

## மெய்ம்மயக்கம்:.

மெய்யெழுத்துகள் ஒன்றைத் தொடர்ந்து ஒன்று பயின்று வரும் வரையறையைக் குறிப்பது. இரண்டு, மூன்று மெய்கள் சேர்ந்து வரும். இது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இருவகையான மயங்குதற்கு உரியது.

— * —

மொழிமரபு.

பொருள் தரும் சொல் மொழி எனப் பெறும். நூன்மரபில் விளக்கப்பட்ட எழுத்துகள் அதன் பயன்பாட்டு அடிப்படையில் மொழிமரபில் விளக்கப் பெறுகின்றது. உயிர், உயிர்மெய் எழுத்துகள் பெற்றின்றி சார்பெழுத்துகள், ஐகார. ஔகார உணர்ச்சிநிலை. மொழி முதல் எழுத்துகள், மொழி இறுதி எழுத்துகள் போன்றவற்றின் அடிப்படைக் கூறுகள் விளக்கப் பெறுகின்றன.

குற்றியலிகரம் என்றால் என்ன? (நூற்: 34, 35
குற்றியலுகரம் என்றால் என்ன? (நூற்: 36, 37)
ஆய்தம் பற்றி குறிப்பு வரைக? (நூற்: 38. 39)

ஓரெழுத்து ஒருமொழிகள்:-

'நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி'. [ஆ. ஈ. ஊ. ஏ. ஐ. ஓ. ஔ] நெடில் எழுத்து ஏழும் தனி மொழியாய் வரும்.

போலி என்பது ஒரு எழுத்து மற்றொரு எழுத்தோடு இணைந்து வரும் போது மற்றொரு எழுத்தாக மாறி வரும் தன்மையைப் பெறும். (நூற்: 54, 55, 56. 57)

சான்று:- அ + இ – ஐ வனம். (அஇவனம்)
அ + உ – ஔ : ஔவை (அஉவை)
ஐ – அய் – ஐவனம் (அய்வனம்)
இடையன் – மடையன்.
ஔவை, கௌவை.

இப் போலி என்பது முதல், இடை, கடை, முற்று என்றும், ஆய்தம் எனவும் ஐந்து நிலைகளில் வரும். முற்றுப் போலி என்பது. ஐந்து – அஞ்சு. என பயின்று வரும் –

## மொழிமுதல் எழுத்துகள்! -

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும். மெய்யெழுத்துகள் உயிருடன் சேர்ந்தே உயிர்மெய்யாக மொழிக்கு முதலில் வரும். தனித்து வராது.

உயிர்மெய் எழுத்துகளான க, த, ந, ப, ம என்னும் ஐந்து எழுத்து பன்னிரண்டு உயிர் எழுத்தோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். (நூற்: 61) 12×5=60

ச என்னும் உயிர்மெய் எழுத்து அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிர் எழுத்து தவிர ஏனைய ஒன்பது உயிர் எழுத்தோடும் மொழிக்கு முதலில் வரும்.

உ ஊ ஒ ஓ என்னும் உயிர் எழுத்துகள் வ என்னும் உயிர்மெய்யோடு வருதல் இல்லை.
4×17=68

ஆ எ ஒ என்னும் மூன்று உயிர் எழுத்து ஞ காரத்திற்கு உரிய. 3×1=3

ஆ என்னும் ஒரு உயிர் எழுத்தோடு மட்டும் யகரம் முதலாக வரும். யா (ஆ+ய்)

மொழி முதலில் வாராத மெய்யெழுத்துகள் தன் பெயரைக் குறிக்கும் இடத்தில் மொழிக்கு முதல் வரும். (நூற்: 23, 90, 150)

[ட, ர, ல, ள. என்னும் உயிர்மெய் எழுத்துகள்

குற்றியலிகரமும், குற்றியலுகரமும் மொழிக்கு முதலில் சில இடங்களில் வரும்.
(நுந்தை, அட்டு)

## மொழி இறுதி எழுத்து!-

"உயிர் ஔ எஞ்சிய இறுதி ஆகும்".

உயிர் எழுத்துகளில் ஔகாரம் தவிர்த்த மற்றவை மொழியின் (சொல்லின்) ஈற்றில் வரும். ஔகாரம் தனித்து இறுதி ஆகாது.

க், வ் எனும் இவையொடு சேர்ந்து ஔ எனும் உயிரும் மொழிக்கு இறுதியாக வரும். (கௌ, வௌ)

அளபெடையால் எ எனும் உயிர் மொழிக்கு இறுதி -யால் வரும்- (ஏஎ) மெய்யோடு சேர்ந்து மொழிக்கு இறுதியால் வராது.

ஒ எனும் உயிரும் அளபெடையால் வரும். (ஓஒ) அதனொடு 'ந' எனும் மெய்யுடனும் மொழி இறுதியால் வரும்.

ஏ, ஓ எனும் உயிர் எழுத்துகள் தனித்து மொழி இறுதியால் வரும். (ஞ) என்ற மெய்யோடு அல்லாமல் பிற மெய்களோடு மொழி ஈற்றில் வரும்.

உ, ஊ எனும் உயிர் எழுத்துகளும் தனித்து மொழி இறுதியால் வரும். (ந, வ்) எனும் மெய் தவிர்த்து ஏனைய மெய்களுடன் ஈற்றில் வரும்.

"உச்சகாரம் இருமொழிக்கு உரித்தே".

உகரத்தை ஈற்றில் பெற்ற சகரம் இரு சொற்களில் மட்டுமே பயின்று வரும். [உசு, முசு)

உகரத்தை ஈற்றில் பெற்ற பகரம் ஒரு சொல்லில் மட்டும் வந்து இரண்டு பொருளை தரும்.

தபு — படுத்துக்கொல்லல்,
கெடுத்துக்கொல்லல்.

## மொழிக்கு இறுதியில் வரும் மெய் எழுத்துகள்:-

ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும்
அப் பதினொன்றே புள்ளி இறுதி. (நூ: 78)

இடையின எழுத்துக்கள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) (ங்) ஙகரம் நீத்த மெல்லின எழுத்துகள் ஐந்தும் [ஞ், ண், ந், ம், ன்) மொழி ஈற்றில் வரும். சான்று: வேய், வேர், வேல், தெவ், வாழ், வேள்
உரிஞ், மண், பொருந், மரம், பொன்.

உகரத்தோடு கூடிய சகரம் (ச்+உ) சு - இரு மொழியால் வருவது போல 'ந்' என்ற மெய் இரு சொற்களில் வரும். பொருந், வெரிந்.

உகரத்தோடு கூடிய பகரம் (ப்+உ=பு) ஒரு சொல்லில் (தபு) மட்டும் வருவது போல 'ஞ' என்ற மெய்யும் ஒரு சொல்லில் மட்டும் வரும். உரிஞ்

"வகரக் கிளவி நான்மொழி ஈற்றது".
'வ்' - என்ற வகரமெய் அவ், இவ், உவ், தெவ் என்ற நான்கு சொற்களில் மட்டும் வரும்.

அஃறிணைச் சொற்களின் ஈற்றில் மகர(ம்) மெய்போல (ன்) னகரமெய் மயங்காத சொற்கள் ஒன்பது ஆகும்.
(நூற்: 82)
சான்று:- உகின், விழன், அழன், குயின், வயான்
செகின், பயின், புழன், கடான்.

என்றவாறு எழுத்துக்கள் மொழியில் பயின்று வருதலை அறிய முடிகிறது.

—*—

## அலகு – II

### எழுத்துக்களின் பொதுப் பிறப்பு

எழுத்துக்களின் பொதுப் பிறப்பைக் கூறும் நூற்பா பின்வருமாறு

"உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியுங் காட்சி யான." (நூ: 83)

தமிழ் எழுத்துக்களை எல்லாம் ஒருவன் முறைப்பட ஆராய்ந்து சொல்லும்போது உந்தியில் இருந்து கிளர்ந்து மேல் எழுகின்ற 'உதானன்' என்னும் காற்றுத் தலை, மிடறு, நெஞ்சு ஆகிய மூன்று இடங்களிலும் நிலைபெற்றுப் பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணம் உட்பட எட்டு இடங்களில் ஓர் உறுப்போடு ஓர் உறுப்புத் தம்மிற் பொருந்தி அமைதி பெற எழுத்துக்கள் பிறக்கும். மேலும் எழுத்துக்கள் ஒரிடத்தில் பிறந்தாலும் சின்னஞ்சிறு வேறுபாடுகளை உடையனவாய்ப் பிறக்கும்.

## உயிரெழுத்துகளின் பிறப்பு

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தத்தம் நிலையில் திரியாவாய் மிடற்றின்கண் பிறந்த வளியான் ஒலிக்கும்.

நூற்பா : "அவ்வழிப்
பன்னீருயிரும் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்"
(நூ : 84)

உயிரெழுத்துக்களுள் அ, ஆ என்னும் இரண்டு எழுத்துக்களும் வாயை அங்காந்து சொல்லப் பிறக்கும்.

நூற்பா : "அவற்றுள்
அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்" (நூ : 85)

இ, ஈ, எ, ஏ, ஐ என்னும் ஐந்து உயிரெழுத்துக்களும் மேற்கூறிய அகர, ஆகாரங்களைப் போல வாயை அங்காந்து சொல்லப் பிறக்கும். மேலும், அவை பல்லினது அணிய இடத்தினை நாவினது அடியின் விளிம்பு சென்று பொருந்தப் பிறக்கும்.

நூற்பா : "இ ஈ எ ஏ ஐயென இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன;
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய"
(நூ : 86)

உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஐந்து உயிரெழுத்துக்களும் உதடுகளைக் குவித்துச் சொல்லப் பிறக்கும்.

<u>நூற்பா:</u> 'உ, ஊ, ஒ, ஓ, ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும்."
(நூ: 87)

உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் ஒலித்துப் பிறக்கும் என்று சொல்லப்பட்டவையாயினும் அவற்றுக்குள் மிகச் சிறிய நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன. இதனைக்,

"தத்தந் திரிபே சிறியவென்ப" (நூ: 88)

என்னும் நூற்பாவால் அறியலாம்.

மெய்யெழுத்துக்களின் பிறப்பு

ககரமும், ஙகரமும் அடிநாக்கு அடிஅண்ணத்தைப் பொருந்த பிறக்கும்.

சகரமும், ஞகரமும் நடுநாக்கு நடு அண்ணத்தைப் பொருந்த பிறக்கும்.

டகரமும், ணகரமும் நுனிநாக்கு நுனி அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

அந்த ஆறு எழுத்துக்களும் நிரல்நிறை வகையான் அறுவகைப் பிறப்பின் அல்ல; மூவகைப் பிறப்பின. இவற்றிற்குரிய நூற்பாக்கள்;

"ககார ஙகாரம் முதல்நா அண்ணம்" (நூ: 89)
"சகார ஞகாரம் இடைநா அண்ணம்" (நூ: 90)
"டகார ணகாரம் நுனிநா அண்ணம்" (நூ: 91)
"அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின (நூ: 92)

## த, ந பிறப்பிடம்

தகரமும், நகரமும் அண்ணத்தை ஒட்டிய மேல்வரிசைப் பல்லின் அடியை, நாக்கினது, நுனி விரிந்து நன்றாகப் பொருந்தப் பிறக்கும்.

நூற்பா: "அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்கும் தகார நகாரம் (நூ: 93)

## ற, ன பிறப்பிடம்

றகரமும், னகரமும் நாக்கினது நுனி மேல்நோக்கிச் சென்று அண்ணத்தை நன்கு பொருந்தப் பிறக்கும்.

நூற்பா: "அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்'
(நூ: 94)

## ர, ழ பிறப்பிடம்

ரகரமும், ழகரமும் நுனிநாக்கு (அணர்ந்து) மேல் நோக்கிச் சென்று அண்ணத்தை வருடப் பிறக்கும்.

நூற்பா: நுனிநா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்" (நூ: 95)

## ல, ள பிறப்பிடம்

நாவினது விளிம்பு தடித்துப் பல்லினது அணிய இடத்தை ஒற்ற லகரமும், வருட ளகரமும் பிறக்கும்.

நூற்பா: "நாவிளிம்பு வீங்கி யண்பல் முதலுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்" (நூ: 96)

ப,ம பிறக்குமிடம்

பகரமும், மகரமும் இரண்டு உதடுகளும் இயையப் பிறக்கும்.

நூற்பா: "இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்" (நூ:97)

வகரம் பிறக்குமிடம்

மேற்பல்லைக் கீழ் உதடு சென்று பொருந்த வகரம் பிறக்கும்.

நூற்பா: "பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்" (நூ:98)

யகரம் பிறக்குமிடம்

நாக்கு அண்ணத்தைச் சேர்ந்த போது மிடற்றினின்று எழும் வளியானது இசை அந்த அண்ணத்தை அணைந்து செறிய யகரம் பிறக்கும்.

நூற்பா: "அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும். (நூ: 99)

மெல்லெழுத்துக்கள் ஆறும் அவற்றுக்குச் சொல்லப்பட்ட இடங்களிலிருந்து பிறந்தாலும் மூக்கின்கண் உண்டாகிய வளியது இசையான் பிறக்கும். அவ்வாறே இடையெழுத்துக்கள் மிடற்று வளியாலும், வல்லெழுத்துக்கள் தலை வளியாலும் பிறக்கும்.

நூற்பா: "மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்"
(நூ: 100)

## சார்பெழுத்துக்களின் பிறப்பு

மொழியை சார்ந்து வருவன என்று சொல்லப்பட்ட சார்பெழுத்துக்கள் மூன்றும் மொழியில் தமக்குப் பற்றுக்கோடாக வரும் மெய்கள் பிறக்கும் இடத்திலேயே பிறந்ததலோடு தமக்குரிய இயல்பில் ஒலிக்கும்.

ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பே எனினும் தலைவளியால் பிறத்தலின், உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும்.

<u>நூற்பா</u>: "சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்து வெளிப் படுத்த ஏனை மூன்றும்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியின் தம்மியல் பியலும்" (நூ:101)

எல்லா எழுத்துக்களும் வெளிப்பட விளந்து சொல்லப்பட்ட இடத்தின் கண்ணே எழுகின்ற வளியானே பிறக்கும். அந்தணர் தம் மறை சொல்லுமிடத்து உள்நின்று எழும் வளியானாய இசையைப் பிணக்கற ஆராய்ந்து மாத்திரை வரையறை கோடல் அந்தணர் மறையின் கண்ணதாகும். அதனை இந்நூலின்கண் சொல்லாது அகத்தினின்று எழுந்து புறத்துப் போந்திசைக்கும் பொருண்மை தருகின்ற வளியானாய இசையது மாத்திரை இந்நூலிற் கூறப்படுகின்றது.

நூற்பாக்கள் :

"எல்லாவெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே (நூ:102)

"அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே" (நூ:103)

இவ்வாறாக பேச்சு ஒலிகள், பேச்சு உறுப்புகளிலிருந்து எவ்வாறு பிறக்கின்றன என்பதை விளக்கியுள்ளார் தொல் காப்பியர். முதல் எழுத்துகளும், சார்பு எழுத்துகளும் பிறக்கும் முறையை வகுத்தும் தொகுத்தும் விரித்தும் விளக்கியுள்ளார்.

ஒலியன்கள் இயங்கு உறுப்புகள், இயங்கா உறுப்புகள் என இருவகைப் படும். கீழ்ப்பல், கீழிதழ், நாக்கு என்பவை இயங்கு உறுப்புகள் எனப்படும். மேற்பல், மேலிதழ், அண்ணம் என்பவை இயங்கா உறுப்புகள் எனப்படும்.

உயிர் ஒலிகள் பிறக்கும்போது உறுப்புகள் செயல்படும். ஆனால் ஒன்றை ஒன்று தொடுவதில்லை.

எனவே தமிழ் எழுத்துப் பிறப்பியல் முறை என்பது எல்லோராலும் விளங்கக்கூடிய நடைமுறைக்கு ஏற்றது எனலாம். இம்முறையாலேயே இக்கால மொழியியலாரும் விளக்குகின்றனர்.

— x —

புணரியல்!.

நின்ற மொழியும், வருமொழியும் சேரும் இச் சேர்க்கையே புணர்தல். சொல்லில் பகுதி + விகுதி என்பது இணைந்தே முழு சொல்லாக விளங்குகின்றது.

நில் + அம் = நிலம்.

இதில் நில் பகுதி. இது சேர்ச்சொல் எனப்பெறும். இவற்றுடன் அம் - எனும் விகுதி சேர்ந்து நிலம் எனும் சொல் உருவாகியுள்ளது.

பெயர்ச் சொல்லுடன் வேற்றுமை உருபுகள் சேர்க்கப்பட்டன. அவன் + ஐ = அவனை. சில இடங்களில் சாரியை மொழிகள் இணைக்கப் பெற்றன. வினையடி போன்ற கால இடைநிலை, வினைமுற்று விகுதி போன்றவையும் சேர்க்கப் பெற்றன. செய் + த் + ஆர் — செய்தார்

தனிச் சொற்கள் தொடர்களாக வரும் போது ஒன்றை ஒன்று தொடரும் போது எழுத்துக்களில் சில மாற்றங்கள் நிகழும், நிகழாமலும் இருக்கும். இவற்றை விகாரப் படுதல், இயல்பாக வருதல் என தொல்காப்பியர் குறிப்பிடுவார். எழுத்ததிகாரத்தின் இறுதி இயல்களில் எழுத்துகளின் புணர்ச்சியினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

நிலை — வருமொழிகள், புணரும் எழுத்துகள், ஏற்படும் மாற்றங்கள் போன்ற பல கூறுகள் பொதுவாகப் புணரியலில் விளக்கப் பெறுகின்றன.

(நூற்பா!- (04)-

முதல் எழுத்து, சார்பெழுத்து எனவரும் முப்பத்து மூன்று எழுத்துகளில் இவற்றுள் இரண்டு எழுத்துகள் மொழி முதலில் வரும்.

இருபத்து நான்கு எழுத்துகள் மொழிக்கு ஈறாக வரும்.
இவை புணர்மொழியால் ஈறாகவும் முதலாகவும் வரும்போது மெய்
உயிர் என இரண்டே எழுத்துகளாகக் கொள்ளப்படும்.

<u>சான்று</u>!- காடு + இல்லை = காடில்லை.
கல் + தூண் = கற்றூண்

(X) புணர்ச்சியில் மொழிமுதல் எழுத்துகள் வருமொழியின் முதல் எழுத்துகள் ஆகும். மொழி இறுதி எழுத்துகள் நிலைமொழியின் இறுதி எழுத்துகள் ஆகும்.

<u>நிலைமொழியில் மெய்!-</u>

'மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்'.
புணர்ச்சியில் மெய், உயிர் என இரண்டே உரையாளர் செய்யப்பட்ட
தான் நிலைமொழி ஈற்றில் வருபவை மெய் புள்ளி பெற்றே நிற்கும்.

<u>சான்று</u> மர<u>ம்</u>, க<u>ல்</u>, வா<u>ழ்</u>

நிலைமொழியின் ஈற்றில் வரும் புள்ளி பெற்ற மெய் இன்னொரு மெய்யாக மாறும். பொன் — குடம் = பொற்குடம்.

'குற்றியலுகரமும் அற்றென மொழிப'

குற்றியலுகரமும் நிலைமொழி ஈற்று மெய் போலவே வருமொழி உயிர் ஏற இடம் கொடுக்கும்.

கோடு + உண்டு — கோடுண்டு
வரகு + இல்லை — வரகில்லை.

<u>மொழியீற்றில் உயிர்மெய்!-</u>

உயிர்மெய் எழுத்து மொழிமுதல் (தூண்) இடை (கடல்) மொழி இறுதி (வாள) என மூன்று இடங்களில் வரும்.

<u>நிலைமொழி வருமொழி எழுத்துகள்!-</u>

(நூற்பா ! 108)

உயிர் — உயிர் : வாழை — இலை
உயிர் — மெய் ! வாழை — மரம்
மெய் — உயிர் ! ஆல் — இலை
மெய் — மெய் : கல் — தாள்.

## நிலை — வரு மொழிகள்:-

(நூற்பா: 109)

நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் புணரும் போது பெயரொடு பெயர், பெயரொடு வினை, வினையொடு பெயர் வினையொடு வினை என நான்கு நிலைகளில் சொற்கள் புணரும்.

சான்று:- பெயர் - பெயர் : சாத்தன் - கை
பெயர் - வினை : சாத்தன் - வந்தான்
வினை - பெயர் : வந்த - சாத்தன்
வினை - வினை : வந்து - சென்றான்.

## புணர்ச்சியின் விரிவு:-

"அவைதாம்
மெய்பிறிது ஆதல் மிகுதல் குன்றலென்று
இவ்வென மொழிப திரியு மாறே".

நிலை-வரு மொழியின் புணர்ச்சியில் மெய்பிறிதாதல், மிகுதல், கெடுதல் என்னும் மூன்று நிலைகளில் மாற்றங்கள் நிகழும்.

சான்று:- பொன் + குடம் - பொற்குடம்.
யானை + கோடு - யானைக் கோடு
மரம் + வேர் - மரவேர்.

## வேற்றுமை உருபுகள்:-

"ஐ ஒடு கு இன் அது கண் என்னும்
அவ்வாறு என்ப வேற்றுமை உருபே".

தமிழில் வேற்றுமை எட்டு என்றாலும் முதல் வேற்றுமையாகிய எழுவாய் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையாகிய விளி வேற்றுமையும் வேற்றுமையாகக் கருதப்படுவதில்லை. இவ்விரண்டும் அல்வழித் தொடராகக் கருதப்படும்.

இரண்டு முதல் எட்டு வரை உள்ள வேற்றுமை அல்லாத பிறதொடர்கள் அனைத்தும் அல்வழித் தொடர்கள் வேற்றுமை உருபுகள் பெயர்களோடு வரும் போது பின்னர் வந்து சேரும்.

சான்று: சாத்தனை (ஐ) சாத்தனின் (இன்)
சாத்தனொடு (ஒடு) சாத்தனது (அது)
சாத்தற்கு (கு) சாத்தன்கண் (கண்).

உருபேற்கும் பெயர்கள்!.

உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் இரண்டும் உருபு ஏற்கும் பெயர்கள்.

சான்று: ஆடூஉ, மகடூஉ
ஒன்று, பல.

சாரியைகள்!.

(நூற்பா: 120)

அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே"

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்னும் ஒன்பதும் இவைபோன்ற பிறவும் சாரியை (மொழிகள்) எனப்படும். பிறவும் என்றதால் தம், நும், நம், உம், கெழு, ஏ, ஐ. போன்று என்றவாறு வரும்.

நூற்பா: 121 முதல் 132 வரையான பகுதி நூற்பாக்களில் மேல் குறித்த சாரியை மொழிகள் புணர்ச்சியில் இடம்பெற்ற வகைதனைக் காணமுடிகிறது.

சாரியையான பொருளியல்!.

(நூற்பா எண்! 133)

பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் தம்முள் பெயரும் வினையுமாக வேறுபட்டும், பெயரும் பெயருமாக ஒன்றுபட்டும்

புணரும்போது வேற்றுமை உருபு நிலைபெற்றும்
நிலைபெறாமல் மறைந்தும் வரும்போது சாரியை வருதல்

பெயர் + சாரியை + வேற்றுமை உரு
↓ ↓ ↓
மா இன் ஐ = மாவினை.

பெயர் + சாரியை — வேற்றுமை உருபு இல்லை.
↓ ↓
நிலா அத்து கொண்டான் — நிலாத்துக்கொண்டான்

சாரியை மொழியின் இயல்பாக வருதல்!

நிலா + கதிர் — நிலாக்கதிர் (நிலாவின் கதிர்)

~~நிலா + முற்றம்~~
நிலா + முற்றம் — நிலாமுற்றம் (நிலாவின் முற்றம்)

இடையில் சாரியை நிற்றல்!

எல்லா + நம்மையும் — எல்லாநம்மையும் (உம்)

எழுத்துச் சாரியை:

எழுத்துக்களைச் சொல்வதற்கென்று சில சாரியைகள் உள்ளன. அவை எழுத்துச் சாரியை எனப்படுகின்றன. எழுத்துக்களைத் தெளிவாகச் சொல்வதற்கு இந்த எழுத்துச் சாரியைகள் பெரிதும் பயன்படுகின்றன.

அ — அகரம். (தெளிவதும்)

க், ங், ய் — ககரம், ஙகரம், யகரம் (எழுத்தும்)

காரம், கரம், கான் என்னும் மூன்றும் எழுத்துக்களைக் கூறுவதற்காகப் பயன்படும் சாரியைகள்.

நெட்டெழுத்துகள் காரம் பெறும்
குற்றெழுத்துகள். கரம், காரம், கான் பெறும்.
ஐ, ஔ எனும் நெட்டெழுத்து கான் பெறும்.

— x —

தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் - 18KPIT04

## அலகு – III

இருபத்து நான்கு நிலைமொழி ஈற்றுக்கான பொதுவான புணர்ச்சி விதிகளைத் தொகுத்துக் கூறுவதால் தொகைமரபு எனப்படுகிறது. இத்தொகை மரபு தொகுத்து பொதுப் புணர்ச்சிகளுக்கு விதிகள் கூறுகின்றது.

நிலைமொழி மெய்யீற்றுப் புணர்ச்சி.

(நூற்பா: 144)

நிலைமொழி இறுதி உயிர் அல்லது மெய் ஈறு இருக்க வருமொழியின் முதலில் க், ச், த், ப் என்னும் வல்லெழுத்துகள் வரும்போது வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சியில் அவற்றின் இனமான மெல்லெழுத்துகள் வரும்.

உயிர் ஈறு, மெய் ஈறுகளின் பொதுப் புணர்ச்சி! –

* அல்வழி, வேற்றுமை என்னும் இருவழியாலும், நிலைமொழிகளாக நிற்கும் 24 ஈற்றுச் சொற்களின் முன்னரும் (ஞ, ந, ம, ய, வ) என்னும் மெய்களும் உயிர் எழுத்துக்களும் வருமொழி முதலில் வரும்பொழுது ஏற்று கொள்ள இயல்பாக முடியும்.

சான்று:- விள ஞான்றது, விள நீண்டது,
தாழ் ஞான்றது, தாழ் நீண்டது. (நூற்: 145)

* மெல்லெழுத்தும், இடையெழுத்தும், உயிரெழுத்தும் வருமொழி முதலில் வரும்போது 24 ஈற்றிலும் மெய் எழுத்து மிகுதலும், மிகாமையும் ஆகிய உறழ்ச்சி விதியைப் பெறுதல் உண்டு. (நூற்: 146)

கதிர்ஞெரி, கதிர்ஞெரி.

ண், ன் எனும் புள்ளியிற்றுச் சொற்புணர்ச்சி :-

ண், ன் நிலைமொழியாய் நிற்க வருமொழியாய் வரும் வினைச் சொல்லில் யகரத்திற்குப் போலியாக ஞகரம் வருதல் உண்டு

மண் யாத்த — மண் ஞாத்த

மொழிமுதல் எழுத்துகளான 22 எழுத்துகளும் வருமொழியாய் வருமிடத்து ண், ன் எனும் புள்ளி எழுத்துகள் அல்வழியிடத்து திரியாமல் வரும்.

மண் + கடிது — மண் கடிது.

மண் + பெரிது — மண் பெரிது.

ண், ன் எனும் புள்ளி எழுத்துகள் வேற்றுமையில் புணருமிடத்து வருமொழி முதலில் வல்லினம் வந்தால் ணகரம் டகரமாகவும் னகரம் றகரமாகவும் திரியும்.

இவ்வாறே லன முன் தநக்கள் திரியும்.
ணள முன் தநவும் டண ஆதல் எனவரும். சான்று :- கல் + தீது — கஃறீது

பொன் + நன்று — பொன்னன்று

மண் + தீது — மண்டீது

மின் + நன்று — மின்னன்று.

உயிர், மெய் ஈறுகளின் இயல்புப் புணர்ச்சி :-

உயிர், மெய் ஈற்று முன்னிலைச் சொற்கள் முன்னர் வலி — மெல்லினத்தை முதலாக உடைய வருமொழி வரும்போது இயல்பாகவும் புணரும், உறழ்ந்தும் புணரும்.

சான்று / இயல்பு :- எழு + கொற்றா — எழுகொற்றா.

உண் + பூதா — உண்பூதா

உறழ்ச்சி :- நட + கொற்றா — நடக்கொற்றா

ஈர் + கொற்றா — ஈர்க்கொற்றா.

அஃறிணை விரவுப் பெயர்கள் வருமொழிகளோடு இயல்பாகப் புணரும்.

சான்று :- சாத்தன் + கொடியன் — சாத்தன் கொடியன்.

## இரண்டாம் வேற்றுமைத் திரிபு:-

இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' புணர்ச்சியால் பல வகையான திரிபுகளை அடையும். (நூற் : 158)

"மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயல்பு மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயர்மிக வருவழி உயர்கெட வருதலும்
சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்
சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்
சாரியை இயற்கை உறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்
மெய்பிறிது ஆகிடத்து இயற்கை ஆதலும்
அன்ன பிறவுந் தன்னியல் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள் வரைந்து இசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப".

விள + குறைத்தான் — விளக்குறைத்தான் — வல்லெழுத்து மிகுந்துள்ளது.

தாய் + கொலை — தாய்க்கொலை (தாய் கொலை) என இயல்பாய் வரவேண்டும்.

மரம் + குறைத்தான் — மரங்குறைத்தான் — மெல்லெழுத்து மிகுந்துள்ளது.

பலா + குறைத்தான் — பலாஅக் குறைத்தான் உயிர் மிகாமல் வந்துள்ளது.

வண்டு + கொணர்ந்தான் — வண்டினைக் கொணர்ந்தான்.

புலி + குறைத்தான் — புலிக் குறைத்தான். என வரும்.

ஐகார புணர்ச்சி பல்வேறு மாற்றங்களைப் பெற்று வரும். உயர்திணைப் பெயர்களோடு இரண்டாம் வேற்றுமை உருபு அவசியம் வரும். பிற இடங்களில் இல்லாமலும் வரும்.

மகன் + பெற்றான் — மகனைப் பெற்றான்.

## இகர ஐகார ஈற்றுப் பெயர்கள்:-

இ, ஐ என்னும் நிலைமொழி ஈற்றின் பின் வருமொழி வல்லினம் இயல்பாதல், மிகுதல், உறழ்ந்து வருதல் என மூவகை நிலைகளில் புணரும். (நன்னூல்: 159)

1. இயல்பு:- குறிது, சிறிது, தீது, பெரிது. என்ற சொற்கள் பருத்தி என்னும் நிலைமொழியோடு சேர்ந்து பருத்தி குறிது .... என்றவாறு வரும்.
2. மிகுதல்:- அளி + கொற்றன் — அளிக்கொற்றன்.
3. உறழ்ச்சி:- கிளி + குறிது — கிளிகுறிது / கிளிக்குறிது.

## சுட்டுவினை நிலைமொழிகள்:-

"சுட்டு முதல் ஆகிய இகர இறுதியும்
எகர முதல் வினாவின் இகர இறுதியும்
சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்
யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
வல்லெழுத்து மிகுவும் உறழ்வும் ஆகுவும்
சொல்லிய முறையின் ஆமென மொழிப". (நன்: 160)

அ, இ, உ, என்னும் சுட்டு எழுத்துக்கள் நிலைமொழியாக நின்று வருமொழியோடு புணரும் போது இயல்பாகவும், உறழ்ந்தும் வரும். எ, யா, ஏ என்னும் மூன்று வினாக் குறி எழுத்துக்களும் அவ்வாறே இயல்பும், உறழ்வும் என இந்நிலைப் புணர்வில் தோன்றும்.

சான்று: அதோளி + கொண்டான் — அதோளிக்கொண்டான்
அவ்வழி + கொண்டான் — அவ்வழி கொண்டான்
யாண்டை + கொண்டான் — யாண்டைக்கொண்டான்
யாங்கனை + கொண்டான் — யாங்கனை கொண்டான்.

## மூவிடப்பெயர்கள் வேற்றுமை உருபு பெறுதல்:-

நெடுமுதல் குறுகிய மூவிடப் பெயர்கள் ஒரு அகரம் பெற்று நிற்கும். மேற்கூறிய இற்றொற்று ஆறாம் வேற்றுமையாலும் நான்காம் வேற்றுமையாலும் இரட்டுவது இல்லை.

"ஆறன் உருபும் நான்கன் உருபும்
கூறிய இற்றொற்று இரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான" (நன்:162)

நெடுமுதல் குறுகும் தம், நம் என்பவற்றின் எழுவாய் உருவங்கள் நாம், தாம் என்பவை ஆகும்.

சான்று: (நாம்) + நம் + அது = நமது
(தாம்) + தம் + அக்கு = தமக்கு

## மூவிடப் பெயர்கள் வேற்றுமை உருபு பெறுதல்:-

தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடப் பெயர்கள் வேற்றுமை உருபுகள் பெறும்.

"உகரமொடு புணரும் புள்ளி இறுதி
யகரமும் உயிரும் வருவழி இயற்கை" (நன்:164)

உகரச் சாரியை பெறும் மெய் ஈ.ற்று நிலைமொழிகளின் முன் வருமொழியில் யகரமும் உயிரும் வர இயல்பாகும்.

சான்று: உரிஞ் + யானா – உரிஞ்யானா
வெரிந் + அனந்தா – வெரிந் அனந்தா.

## அளவு, நிறை, எண்ணுப்பெயர்கள் பெறும் புணர்ச்சி :-

உயிரையும், புள்ளியையும் இறுதியாக உடைய அளவுப் பெயரும், நிறைப் பெயரும், எண்ணுப் பெயரும் ஆகிய எல்லாச் சொற்களும் நிலைமொழிகளாக நின்றும் கலந்து ஒத்தற்கு இயைபாகிய சொற்களாய் தம்மில் குறைந்த சொற்கள் வருமொழியாக வரும் காலத்து நிலைமொழி ஏ, என்னும் சாரியை பெறும். நிலைமொழி பெரிய அளவாகவும் வருமொழி சிறிய அளவாகவும் இருக்குமானால் நிலைமொழி ஏகாரச் சாரியை பெறும். (நூற்பா: 165)

காட்டு:-

அளவுப் பெயர் :- கலம் + ஏ + பதக்கு = கலனே பதக்கு

நிறைப் பெயர் :- தொடி + ஏ + கஃசு = தொடியே கஃசு

எண்ணுப் பெயர் :- எட்டு + ஏ + கால் = எட்டே கால்.

அரை என்னும் சொல் வருமொழியாக வரும் இடத்து அளவு, நிறை, எண்ணுப் பெயர்கள் ஏ என்னும் சாரியை பெறாது இயல்பாக புணரும்.

"அரையென வரூஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்றால் சாரியை இயற்கை". (நூ! 166)

காட்டு :- உழக்கு + அரை = உழக்கரை. (அளவு)
தொடி + அரை = தொடியரை (நிறை)
மூன்று + அரை = மூன்றரை (எண்ணு

வல்லெழுத்து:-

"குறை கிளவிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே" (நூற் 236

குறை என்னும் சொல் வருமொழியாக வரும் காலத்து அளவு, நிறை, எண்ணுப் பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சிக்கு உரிய விதிப்படி புணரும்.

காட்டு :- கலம் + குறை = கலக்குறை

இது நூற்பா எண் 311 - ன் விதிப்படி புணரும்.

7.



"மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே" (நூ: 311)

என்பதில் திசைமொழியான இறுதியாக உள்ள மகரம் கெட்டு வேற்றுமைக்கேற்ற வல்லெழுத்து மிக்கு வந்தது.

காலத்தினது இறை என்பது இறந்தப் பொருள். காலமும் அதன் இறையும் என்று உம்மைத் தொகையாகவும் பொருள் கொள்ளலாம்.

சான்று: தொடி + இறை = தொடிக் இறை — (திணை)
கால் + இறை = கான் இறை — (எண்)

இறுதிச் மொழிகள்:

இறுதிய உகர ஈற்று அளவுப்பெயரும், நிறைப்பெயரும் எண்ணுப்பெயரும் இறையொடு புணரும் வழி இன் சாரியை பெற்று வரும். "இறுதிய உகரக் கின்னே சாரியை" (நூ: 168)

சான்று: உழக்கு + இன் + இறை — உழக்கின் இறை (அளவு)
கழஞ்சு + இன் + இறை — கழஞ்சின் இறை (நிறை)
ஒன்று + இன் + இறை — ஒன்றின் இறை (எண்)

காலம் என்னும் சொல் அத்து சாரியைப் பெற்றும் வரும். கலமாகிய அளவுப்பெயர் பின்னர் இறை என்னும் சொல் வருமொழியாக வரும்போது அத்துச் சாரியை பெறும்.

சான்று: கலம் + அத்து + இறை = கலத்துக் இறை

"பனையின் அளவும் காவின் நிறையும்
நினையுங் காலை இன்னொடு சிவணும்".

இறை என்னும் சொல் வருமொழியாக வரும் காலத்துப் பனை என்னும் அளவுப்பெயரும் கா என்னும் நிறைப்பெயரும் இன் சாரியைப் பெற்றுப் புணரும்.

கா + இன் + இறை = காவின் இறை
பனை + இன் + இறை = பனையின் இறை.

இவ்வாறு தொகைமரபு இயலில் புணர்ச்சி இலக்கணம் விளக்கப் பெற்றுள்ளது.

## உருபியல்!

### அகர ஈற்றுப் பன்மை பெயர் வற்றுச் சாரியை பெறுதல்

பல்ல, சில்ல, உள்ள, இல்ல என்னும் அகர ஈற்றுப் பன்மைப் பெயர்கள் வற்றுச்சாரியை பெற்று வேற்றுமை உருபுகளோடு புணரும்.

(எ-டு) பல்லவற்றை, பல்லவற்றோடு; உள்ளவற்றை, உள்ளவற்றோடு; இல்லவற்றை, இல்லவற்றோடு; சில்லவற்றை, சில்லவற்றோடு என ஒட்டுக.

நூற்பா: பல்லவை முதலிய அகர இறுபெயர்
வற்றொடு சிவணல் எச்சமின்றே"
(நூ:175)

'யா' என்னும் வினாப்பெயரும் வற்றுச் சாரியை பெற்று வேற்றுமை உருபுகளுடன் புணரும்.

(எ-டு) யாவற்றை, யாவற்றொடு.

நூற்பா: "யாவென் வினாவும் ஆயியல் திரியாது"
(நூ:176)

சுட்டு முதல் உகரமாகிய அது, இது, உது என்னும் சொற்கள் 'அன்' சாரியை பெற்று வேற்றுமை உருபுகளோடு புணரும். அவ்வாறு புணரும்பொழுது நிலைமொழி இறுதியில் உள்ள உகரம் தான் ஏறி நின்ற தகரமெய் நிற்கத் தான் மட்டும் கெடும்.

(எ-டு) அது + அன் + ஐ
அத் + அன் + ஐ = அதனை, இதனை, உதனை.

நூற்பா: "சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித்து உகரங் கெடுமே" (நூ: 177)

அச்சுட்டெழுத்தினை முதலாக உடைய ஐகார ஈற்றுச் சொற்கள் அவை, இவை, உவை, என்பனவாகும். இம்மூன்று சொற்களும் வற்றுச்சாரியை பெற்று வேற்றுமை உருபுகளோடு புணரும். அவ்வாறு புணரும் போது நிலைமொழியின் இறுதி ஐகாரம் நிற்றலும் உரித்து, நில்லாமையும் உரித்து.

(எ.கா) வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐயின்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே" (புணரியல்-123)

என்னும் விதிப்படி வற்றுச் சாரியையின் வகர மெய் கெட்டது.

அவை + வற்று + ஐ

அவை + வ் + அற்று + ஐ

அவை + அற்று + ஐ

பின் நிலைமொழிக்கும், சாரியைக்கும் இடையே யகர உடம்படுமெய் தோன்றியது.

அவை + ய் + அற்று + ஐ = அவையற்றை.

நிலைமொழி இறுதி ஐகாரம் கெட்டவழி எஞ்சி நின்ற வகர ஒற்றை வற்றின்மிசை ஒற்று என்று கெடுக்க.

அவை - வற்று + ஐ — அவற்றை.

அ + வற்று + ஐ = அவற்றை.

நூற்பா : "சுட்டு முதலாகிய ஐயென் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே"
(நூ: 178)

யா என்னும் வினா எழுத்தை முதல் எழுத்தாகவும் ஐகாரத்தை இறுதி எழுத்தாகவும் கொண்ட யாவை என்னும் சொல்லும் வற்றுச் சாரியை பெற்று வேற்றுமை உருபுகளுடன் புணரும்.

அவ்வாறு புணரும்போது நிலைமொழி இறுதியில்
உள்ள வகரமும், ஐகாரமும் முழுவதுமாக கெடும்.

(எ-டு) யாவை + வற்று + ஐ
யா + வற்று + ஐ = யாவற்றை, யாவற்றொடு

நூற்பா: "யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
ஆயியல் திரியா தென்மனார் புலவர்
ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே (நூ:179)

நீ என்னும் முன்னிலைப் பெயர்ச்சொல் நெடுமுதல் குறுகி, னகரம் பெற்று நின் என்றாகி, உருபுகளோடு புணரும்.

(எ-கா) நீ - நின் + ஐ = நின் + ன் + ஐ = நின்னை

நூற்பா : "நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றாகும்மே" (நூ:180)

ஒகார ஈற்றுச் சொற்கள் ஒன் சாரியை பெற்று வேற்றுமை உருபுகளோடு புணரும்.

(எ-கா) கோ + ஒன் + ஐ = கோஒனை

நூற்பா : "ஒகார இறுதிக்கு ஒன்னே சாரியை" (நூ:181)

விள, பலா முதலிய அகர, ஆகார ஈற்று மரப்பெயர்க் கிளவிகள் அத்துச் சாரியை பெற்றுக் கண் உருபுடன் புணரும்.

(எ-கா) விள + அத்து + கண் = விளவத்துக்கண்
பலா + அத்து + கண் = பலாவத்துக்கண்

நூற்பா: "அ, ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு
அத்தொடுஞ் சிவணும் ஏழன் உருபே" (நூ: 182)

## மெய்யீற்றுச் சொற்கள் வேற்றுமை உருபுகளோடு புணர்தல் :-

ஞகர, நகர ஈற்றுச் சொற்கள் இன்சாரியை பெற்று வேற்றுமை உருபுகளோடு புணரும்.

(எ-டு) உரிஞ் + இன் + ஐ = உரிஞினை

பொருந் + இன் + ஐ = பொருநினை

நூற்பா : "ஞ ந என்புள்ளிக்கு இன்னேசாரியை" (நூ 183)

அவ், இவ், உவ் என்னும் சுட்டுமுதல் வகர ஈற்றுச் சொற்கள் வற்றுச் சாரியை பெற்று உருபுகளோடு புணரும்.

(எ-டு) அவ் + வற்று + ஐ = அவற்றை, இவற்றை, உவற்றை

நூற்பா: "சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட இறுதி யியல்திரி பின்றே" (நூ: 184)

தெவ் என்னும் சொல் இன்சாரியை பெற்று வேற்றுமை உருபுகளோடு புணரும்.

(எ-டு) தெவ் + இன் + ஐ = தெவ்வினை

நூற்பா: "ஏனை வகரம் இன்னொடு சிவணும்" (நூ: 185)

மகர ஈற்றுச் சொற்கள் அத்துச் சாரியை பெற்று வேற்றுமை உருபுகளோடு புணரும்.

(எ-கா) மரம் + அத்து + ஐ = மரத்தை

நூற்பா : "மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை" (நூ:186)

உரும் முதலிய சில மகர ஈற்றுச் சொற்கள் அத்துச் சாரியை பெறாது இன்சாரியை பெற்று வேற்றுமை உருபுகளோடு புணரும்.

(எ-டு) உரும் + இன் + ஐ = உருமினை
(உரும் - இடி)

நூற்பா: "இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே" (நூ 187)

நும் என்னும் முன்னிலை பெயர் சாரியை பெறாது வேற்றுமை உருபுகளோடு புணரும்.

(எ-டு) தாம் + ஐ + தம் + ம் + ஐ = தம்மை, தம்மொடு

நாம் + நம் + ஐ - நம் + ம் + ஐ = நம்மை, நம்மொடு.

யாம் என்னும் சொல் எம் எனத் திரிந்து சாரியை பெறாது வேற்றுமை உருபுகளோடு புணரும்.

யாம் - எம் + ஐ - எம் + ம் + ஐ = எம்மை, எம்மொடு

நூற்பா : "தாம் நாம் என்னும் மகர இறுதியும்
யாமென் இறுதியும் அதனோ ரன்ன
ஆ எ ஆகும் யாமென் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும் (நூ : 189)

அஃறிணையை உணர்த்தும் எல்லாம் என்னும் சொல் வேற்றுமை உருபுகளோடு புணரும் போது நிலைமொழி முன்னர் வற்றுச் சாரியையும் உருபின் முன்னர் உம் சாரியையும் வரும்.

(எ-டு) எல்லாம் + ஐ

எல்லாம் + வற்று + ஐ + உம் = எல்லாவற்றையும்

எல்லாவற்றொடும்.

நூற்பா: "எல்லா மென்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதி யான" (நூ : 190)

உயர்திணையை உணர்த்தும் எல்லாம் என்னும் சொல் வேற்றுமை உருபுகளோடு புணரும் போது நிலைமொழி முன்னர் நம் சாரியையும் வேற்றுமை உருபு முன்னர் உம் சாரியையும் பெற்று புணரும்.

(எ-டு) எல்லாம் + ஐ

எல்லாம் + நம் + ஐ + உம் = எல்லாநம்மையும்

நூற்பா: "உயர்திணை யாயின் நம்மிடை வருமே" (நூ:191)

வேற்றுமை உருபுகளோடு புணரும் காலத்து நிலைமொழியாக நின்ற 'எல்லாரும்' எல்லீரும் என்னும் சொற்களின் இறுதியில் உள்ள உம் கெடும். அங்குக் கெட்ட உம் வேற்றுமை உருபுகளின் பின்னர் வந்து நிற்கும். எல்லாரும் என்னும் படர்க்கைச் சொல்லில் நிலைமொழிக்கும், வேற்றுமை உருபிற்கும் இடையில் தம் சாரியை வரும் எல்லீரும் என்னும் முன்னிலைச் சொல்லில் நிலைமொழிக்கும் வேற்றுமை உருபிற்கும் இடையே நும் சாரியை வரும்.

(எ-டு) எல்லாரும் + ஐ

எல்லார் + தம் + ஐ + உம் = எல்லார்தம்மையும்

எல்லீரும் + ஐ

எல்லீர் + நும் + ஐ + உம் = எல்லீர்நும்மையும்

நூற்பா: "எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும்
எல்லீரு மென்னும் முன்னிலை யிறுதியும்
ஒற்றும் உகரமுங் கெடுமென மொழிய
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே"
(நூ:192)

'தான்' என்பது நெடுமுதல் குறுகித் தன் என்று திரிந்தும், யான் என்பது என் என்று திரிந்தும் வேற்றுமை உருபுகளோடு புணரும்.

(எ-டு) தான் - தன் + ஐ = தன் + ன் + ஐ = தன்னை.
தன்னொடு

யான் - என் + ஐ = என் + ன் + ஐ = என்னை, என்னொடு

நூற்பா : "தான்யான் என்னும் ஆயீரிறுதியும்
மேன்முப் பெயரொடும் வேறுபாடிலவே" (நூ : 193)

அழன், புழன் என்னும் சொற்கள் அத்து அல்லது இன் சாரியை பெற்று வேற்றுமை உருபுகளொடு புணரும்.

(எ-டு) அழன் + அத்து + ஐ

அழ + த்து + ஐ = அழத்தை, அழத்தொடு

அழன் + இன் + ஐ = அழனினை, அழனினொடு

அழன் - பிணம்

புழன் + அத்து + ஐ

புழத்து + ஐ = புழத்தை, புழத்தொடு

புழன் + இன் + ஐ = புழனினை, புழனினொடு.

நூற்பா : "அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப உணரு மோரே" (நூ : 194)

என்றவாறு உருபியல் என்னும் இயலில் எழுத்துச் சொற்கள் வேற்றுமை உருபுகளொடு புணரும் தன்மை விளக்கப் பெறுகின்றது.

— x —